# சாதி ஒழிப்பு வீரர்கள் பலி!

**இ**ங்கு நாம் ஒரு மகிழ்ச்சிக்காகக் கூடியிருக்கவில்லை. நமக்கு ஏற்பட்டிருக்கும் தொல்லைகளையும் நம் இயக்கக் கொள்கைக்காக உயிர்த் தியாகம் புரிந்த வீரர்களுக்கு சரியான மரியாதை செலுத்தக்கூட விடாத அதிகாரிகளின் செயல் கண்டு ஆத்திர மிகுந்தவர்களாக உள்ளோம். நல்லுணர்வுகூட இல்லை. தலைவர் பெரியார் அவர்கள் அறிவுரைப்படி நாம் நடக்க வேண்டியவர்களாக இருப்பதால் நமது உணர்ச்சிகளைத் தீயவழிகளில் செலுத்தாமல் எவ்வளவு கொடுமைகள் நமது இயக்கத் தோழர்களுக்கு இழைத்தாலும் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. நாம் வீரமற்றவர்களல்ல. பெரியாரின் ஆணைப்படி அமைதி காக்க கடமைப்பட்டு நிற்கிறோம். நமது இலட்சியத்தை அடைய இதுவே வழி என்கிறார் பெரியார்.

சகிப்புத் தன்மைதான் முக்கியம். ஆயினும் நமது சகிப்புத் தன்மையை மாற்றார் உணராது நம்மை பலவீனர்கள் என்று உணர்ந்து மனிதத் தன்மையற்றவராக நடந்து கொள்வது கண்டு நம் மனம் துடிக்கிறது. நமது சகிப்புத் தன்மைக்கு இரு உயிர்களைப் பலி கொடுத்து விட்டோம். இன்னும் எத்தனை உயிர்களைக் கொடுக்க வேண்டியிருக்கின்றோமோ என்று நினைக்கும்போது நெஞ்சு வெடிக்கும் போலிருக்கிறது. இன்று வந்த செய்திப்படி இன்னும் 46 பேரை சிவில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பியுள்ளனர். அவர்கள் மிக மோசமான நிலையில்தானே அனுப்பப்பட்டிருக்க வேண்டும். எந்தச் சமயம் எந்தச் செய்தி வருமோ என எண்ண வேண்டியுள்ளது. இவர்கள் மரண வாயிலில் இருக்கும்படி இந்த ஆட்சியாளர் விடுவது நீதியா? இறந்த இருவரும் உணவுக்கு வகையின்றிச் சிறை சென்றவர்களா? இயக்க லட்சியத்துக்காகச் சென்றனர். அவர்களைப் பிணமாகத் தருவதுதானா மனிதப் பண்பு? இத்தனை மக்களும் வரி செலுத்தும் மக்கள்தானே? இவர்களை மனிதப் பண்போடு நடத்தக்கூட முடியவில்லையே? இதற்குத் தானா பெருவாரியாக ஓட்டளித்து அனுப்பினர் இவர்களை? நாங்கள் இந்த அரசாங்கத்திடம் எந்தவித உதவியும் வேண்டவில்லை; அனுதாபம் செலுத்தவும் கோரவில்லை; மக்களை மனிதர்களாக நடத்தத்தானே வேண்டும்? இந்த ஆட்சியாளருக்கு மக்கள் செய்த உதவிக்கு நன்றிகூடக் காட்ட முடியவில்லையே? தமிழர் பண்பு இவ்வளவு மோசமாகவா போய்விட்டது என்று நினைக்கவே மிக வருத்தமாக இருக்கிறது.

பெரியார் அவர்கள் இவ்விதக் கொடுமைகள் வரும் என்று எதிர்பார்த்திருந்ததாகவும், ஆனால், இவ்வளவு விரைவில் ஏற்படுமென்று எதிர்பார்க்கவில்லை என்றும் தாம் வருத்தப்பட்டார். பிணத்தைக் கூடத் தரமறுத்தார்களே என்று சொன்னபோது ஆத்திரம் அடையக் கூடாதென்றும், இதுபற்றி அமைச்சர்கள் மேலதிகாரிகளைக் கண்டு எதுவும் குறைவு இன்றி தியாக வீரர்களுக்குச் செய்ய வேண்டியவற்றை அமைதிக்குப் பங்கமின்றி நடத்தவும் கட்டளையிட்டார்கள். பதற்றம் வேண்டாம்; இதனால் நாம் புதுப் பலம் பெறுவோம் என்றார்கள்.

நாம் இதுவரை எந்த ஒரு சிறு காரியத்துக்கும் அதிகாரிகள் தயவை எதிர்பார்க்கவில்லை. நம் கழக வீரரின் சவத்துக்கு மரியாதை செய்யவும் முடியாத பயங்கர நிலை வந்ததே என்றதற்கு மந்திரிகள் தயவு நமக்கு வேண்டாம் என்றாலும், விஷயத்தை எடுத்துச் சொல்வதில் தவறில்லை என்றார். நாட்டுக்காக - நாட்டு மக்களின் மானம் காக்க உயிர்விட்ட தியாகிகளைக் கவுரவிக்க வேண்டி அப்பாவிகள் இல்லம் தேடிச் சென்றேன். அவர்கள் கவனிப்பதாகச் சொன்ன செய்தியை மீண்டும் பெரியாரவர்களிடம் சொன்னபோது, நம் மக்கள் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டும். எதிரிகள் கலவரத்தைத் தூண்டி இயக்கத்தைக் கவிழ்க்க முயலுவார்கள். அமைதியாக எவ்விதச் சிறு கலவரத்துக்கும் இடமின்றி வீரர்களின் உடலை மரியாதையுடன் அடக்கம் செய்து கவுரவியுங்கள் என்றார்.

அதன்பின் திருச்சிக்கு விரைந்து வீரர்களுக்குத் தக்க மரியாதைகளைச் செலுத்தி மிகவும் சிறப்பாக அடக்கம் செய்தோம். இங்குள்ள கூட்டம்போல் 20 - 30 மடங்குக்கு மேல் மக்கள் திரண்டு ஊர்வலத்தில் பங்கு கொண்டனர்.

இவ்விதம் சிறை அதிகாரிகள் நம் கழக வீரர்களைப் பழிவாங்கினர். மருத்துவ சிகிச்சைகூட சரிவர அளிக்காமல் நம் தோழர்களைக் கொடுமைப்படுத்துவது இனியாவது நீங்க வேண்டும். அரசாங்கம் செய்யும் கொடுமைகள் மூலம் பார்ப்பனர்களுக்குப் பயந்து நடந்து கொள்வது மூலம் கழகத்தை ஒழித்துவிட எண்ணியிருக்கலாம். இதன் பலனை அறியும் காலம் வரும்.

திருச்சியில் தியாக வீரர்களின் உடலை அடக்கம் செய்த பின் சிறையிலுள்ள மற்ற தோழர்களைக் கண்டு வந்தோம். அவர்களுக்கு ஆறுதல் கூறி வந்தோம். பின்னர் சென்னை வந்து பெரியார் அவர்களிடம் அரசாங்கம் செய்த தவறுகளையும், போலீசார் திருச்சியில் செய்த கெடுபிடிகளையும் கூறிய போது, வீரமணி அவர்கள் பேசவும் முடியாமல் கோவென அழுது விட்டார்.

பெரியார் அவர்கள், “இப்படி ஆத்திரப்படக் கூடாது. நானும்தான் ஆத்திரத்தில் ஓர் அவசர முடிவுக்கு வந்து, பின் மாற்றிக் கொண்டேன். எந்தக் காரியத்தை இதுவரை கண்டித்தேனோ, அதையே செய்யத் துணிந்தேன். நானும் சிறையிலுள்ள 4,000 தோழர்களும் அரசினர் மனம் திருந்தும் வரை சாதி ஒழிப்புக்கு முயற்சிக்கும்வரை உண்ணாவிரதம் இருக்கவும் துணிந்து, பின் இது ஆத்திரப்பட்ட செய்கையென மாற்றிக் கொண்டேன்” என்று பெரியார் கூறியதோடு, பத்திரிகைகளுக்கு எழுதிய கடிதத்தையும் படித்துக் காட்டினார். இது எவ்வளவு பெரிய பயங்கரமான நிலை). சண்டித்தனத்தால் மக்கள் நிலையை மாற்றுவது எளிது. ஆனால், அது நிலைக்காது. மக்களைச் சரியான - உண்மையான நிலையை உணரச் செய்ய வேண்டும். அதற்காகத் தொடர்ந்து பிரச்சாரம் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

அரசாங்கம் இந்த இருவருக்கும் இழைத்த அநீதியை, கொடுமையை நீடிக்க விடவேண்டாம் என எச்சரிக்கவே இதைச் சொல்கிறேன். பலிகளைத் தவிர்க்க வேண்டும், மனிதப் பண்போடு நடக்க வேண்டும்.

*(சாதி ஒழிப்புப் போரில் ஈடுபட்டுத் திருச்சி சிறையில் மாண்ட பட்டுக்கோட்டை ராமசாமி, மணல்மேடு வெள்ளைச்சாமி ஆகியோருக்கு சென்னை - மயிலாப்பூரில் நடந்த இரங்கல் கூட்டத்தில் அன்னை மணியம்மையார் அவர்கள் ஆற்றிய உரை.)*

- "விடுதலை" *(18.3.1958)*